## மே 1 - சர்வதேச தொழிலாளர் தினம்

## மே 1 - மகாராஷ்டிர & குஜராத் மாநில தினம்

## மே 1 - உலக ஆஸ்துமா தினம்

- ஆண்டுதோறும் மே மாதம் முதல் செவ்வாய்க்கிழமை உலக ஆஸ்துமா தினம் கடைபிடிக்கப்படுகிறது.
- ஆஸ்துமா நோய் ஒவ்வாமையால் வருகிறது.
- மரபணு பிரச்சினையால் பரம்பரையாகவும், மாசுகள், தொழிற்சாலை கழிவுகள், விறகு அடுப்புகள் பயன்படுத்துதல் போன்றவை ஒவ்வாமையைத் தூண்டுவதாலும் ஆஸ்துமா பாதிப்பு ஏற்படுகிறது.

# மாநிலம்

## *தமிழ்நாடு*

### *88-வது ஆண்டு உப்பு சத்தியாகிரக போராட்டத்தின் நினைவு நாள்*

- உப்பு சத்தியாகிரக போராட்டத்தின் 88-வது ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் நேற்று நடைபெற்றது.
- 1930 ஏப்ரல் 30-ம் தேதி ஆங்கிலேயருக்கு எதிரான உப்பு சத்தியாகிரகப் போராட்டம் ராஜாஜி தலைமையில் நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் நடைபெற்றது.

### *மகாராஷ்டிரா*

### மகாராஷ்டிரா மாநில விமானப் போக்குவரத்தை சிந்துதுர்க் விமான நிலையம் ஊக்குவிக்கும்

- மகாராஷ்டிர மாநிலத்தில் இந்த ஆண்டு **சிந்துதுர்க் மாவட்டம் பாருலேசிபி** என்னும் இடத்தில் **புதிய விமான நிலையம்** தொடங்கப்பட உள்ளது.

***ஜம்மு-காஷ்மீர்***

- ஜம்மு-காஷ்மீர் மாநிலத் துணை முதல்வராகிறார் சபாநாயகர் கவீந்தர் குப்தா.

# தேசியசெய்திகள்

***2018 ஏப்ரல் மாதத்தின் ஜி.எஸ்.டி. வருவாய் ரூ. 1 லட்சம் கோடியைத் தாண்டியது***

- ஏப்ரல் மாதத்தில், மத்திய, மாநில அரசுகள் ஈட்டியுள்ள மொத்த வருவாய் முறையே மத்திய ஜி.எஸ்.டி. மூலம் ரூ. 32,493 கோடி மற்றும் மாநில ஜி.எஸ்.டி. மூலம் ரூ. 40,257 கோடி ஆகும்.

***ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுக்கான வருகையாளர் விருதுகளை குடியரசுத்தலைவர் நாளை வழங்குகிறார்***

- அடிப்படை மற்றும் செயல்முறை அறிவியல் , மனிதநேயம், கலை, சமூக அறிவியல் , தொழில்நுட்ப மேம்பாட்டுக்கான துறைகளில் ஆராய்ச்சிக்கான வருகையாளர் விருதுகளை குடியரசுத்தலைவர் திரு.ராம் நாத் கோவிந்த் 02.05.2018 வழங்குகிறார்.

***இந்தியா வந்தார் செர்பிய துணை பிரதமர் - 4 நாட்கள் சுற்றுப்பயணம்***

- செர்பிய குடியரசு நாட்டின் துணை பிரதமரும் வெளியுறவுத் துறை மந்திரியுமான இவிகா டேசிக் இந்தியாவில் 4 நாட்கள் சுற்று பயணம் மேற்கொள்கிறார்.

***இந்தியாவின் இளம் புத்தக ஆசிரியர் - மும்பை சிறுவன் சாதனை***

- மகாராஷ்டிரா மாநிலம் மும்பையைச் சேர்ந்த அயான் கபாடியா என்ற 9 வயது சிறுவன் மிகச்சிறிய வயதில் புத்தகம் எழுதி இந்தியாவின் இளம் புத்தக ஆசிரியராக சாதனைப் படைத்துள்ளான்.

# சர்வதேச செய்திகள்

### *புதுதில்லியில் இந்தியா ஜப்பான் இடையிலான 9 –வது எரிசக்திப் பேச்சுவார்த்தை*

- பொருளாதார வளர்ச்சிக்கு , நம்பகமான, தூய்மையான, குறைந்த செலவில் உற்பத்திச் செய்யப்படும் எரிசக்தி மிகவும் அத்தியாவசியமானது என்று இந்தியாவும் ஜப்பானும் ஒப்புக் கொண்டுள்ளன.
- புதுதில்லியில் 01.05.2018 நடைபெற்ற இந்தியா ஜப்பான் இடையிலான 9 -வது எரிசக்திப் பேச்சுவார்த்தைத் தொடர்பான கூட்டத்திற்குப் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் , பாதுகாப்பான, எளிதில் அணுகக் கூடிய எரிசக்தி வளம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென்று, தெரிவிக்கப்பட்டுள்ளது.
- உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாகத் திகழும் ஜப்பானும், ஏழாவது பொருளாதார நாடாக விளங்கும் இந்தியாவும் இருதரப்பு எரிசக்தி ஒத்துழைப்பை வலுப்படுத்த ஒப்புதல் தெரிவித்தனர்.

### *ஜப்பான், சீனா, தென்கொரியா உச்சி மாநாடு - 9-ம் தேதி டோக்கியோவில் நடைபெறுகிறது*

- இந்த ஆண்டின் உச்சி மாநாடு மே 9-ம் தேதி டோக்கியோ நகரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஜப்பானில் இந்த மாநாடு தற்போது நான்காவது முறையாக நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

### *இஸ்லாமாபாத்தில் அதிநவீன சர்வதேச விமான நிலையம் - பாகிஸ்தான் பிரதமர் திறந்து வைத்தார்*

- ஒய் வடிவில் அமைக்கப்பட்டுள்ள இந்த விமானநிலையம் பாகிஸ்தானின் சர்வதேச விமானங்களில் மிகப்பெரியதாக இருக்கும்.

# வணிகசெய்திகள்

*இன்ஜினீயரிங் ஏற்றுமதி 17 சதவீதம் உயர்வு*

- அமெரிக்காவுக்கான இந்தியாவின் இன்ஜினீயரிங் ஏற்றுமதி 2017-18-ம் நிதி ஆண்டில் 17 சதவீதம் அதிகரித்து 7,600 கோடி டாலராக உயர்ந்துள்ளது.
- இந்தியாவின் ஏற்றுமதி வருமானத்தில் இன்ஜினீயரிங் ஏற்றுமதியின் பங்களிப்பு 25 சதவீத அளவுக்கு உள்ளது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுசெய்திகள்

***ஹாக்கி***

- இந்திய ஆடவர் ஹாக்கி அணியின் பயிற்சியாளரானார் ஹரேந்திர சிங்; மகளிர் அணியின் பயிற்சியாளராக மரிஜென் மறுநியமனம்.

*கால்பந்து*

- கால்பந்து எழுத்தாளர்கள் சங்கத்தின் சிறந்த வீரர் விருதை தட்டிச் சென்றார் எகிப்து நாட்டின் முன்னணி கால்பந்து வீரர் முகமது சாலா.

***கிரிக்கெட்***

- ஐசிசி டெஸ்ட் தரவரிசை- இந்தியா 125 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடம்.

*துப்பாக்கி சுடுதல்*

- உலகத் தரவரிசையில் முதல் இடம் பிடித்தார் துப்பாக்கி சுடுதல் வீரர் ஷாஜர் ரிஸ்வி

# நியமனம்

- சிதான்ஷு ரஞ்சன் கர் - பத்திரிகை தகவல் அலுவலகத்தின் தலைமை இயக்குனர்